**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**பழனி.**
**முன்னிலை : திரு.இரா. கார்த்திகேயன்,பி.ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் நாள் திங்கட்கிழமை**

**இ.ம.எண்.3/2023**
**இன்**
**அ.வ.எண்.85/2022**

M.அஜீசுல் ரகுமான் .....மனுதாரர்/ வாதி

/எதிர்/

M. ரபீக் அகமது ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக கூடுதல் உத்தரவுக்காக எடுத்துக்கொண்ட போது மனுதாரர் /வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.அப்துல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.இராஜமாணிக்கம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**உத்தரவு**

இம்மனுவானது பழனி II இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 22.07.2020ம் தேதி பதிவாகி உள்ள MOD ஆவண எண்.1706/2020-ல் கையெழுத்தினையும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் மேற்படி வழக்கில்

தாக்கல் செய்யப்பட்டுள்ள கடந்த 23.08.2020–ம் தேதிய முச்சலிக்காவில் மனுதாரர்/வாதி கையெழுத்திட்டதாகச் சொல்லக்கூடிய கையெழுத்தினையும் கையெழுத்து நிபுணரிடம் அனுப்பி மேற்படி ஆவணங்களில் உள்ள கையெழுத்து பதிவுகளை ஒப்பிட்டு கருத்துரை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

I) இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர்அசல் வழக்கில் பிரதிவாதி.

ii) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட 23.8.2020 ம் தேதியிட்ட முச்சலிக்கா ஆவணம் வாதியால் மறுக்கப்பட்டுள்ளது.

Iii) மேற்படி 23.08.2020 ம் தேதியிட்ட எதிர்மனுதாரர்/ பிரதிவாதியால் முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்து மனுதாரர்/ வாதி கையெழுத்து அல்ல என மறுக்கப்பட்டுள்ளது.

iv) அவ்வாறு மேற்படி ஆவணத்தில் உள்ள மனுதாரர்/வாதி கையெழுத்து அல்ல என நிரூபிக்கும் பொருட்டு மனுதாரர்/ வாதி கடந்த 22.07.2020 ம் தேதியன்று பழனி II இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பாரத ஸ்டேட் வங்கி நெய்க்காரப்பட்டி கிளைக்கு எழுதிக்கொடுத்த அடமான ஆவணத்தில் உள்ள மனுதாரர்/ வாதியின் கையெழுத்தை, எதிர்மனுதாரர்/ பிரதிவாதி முன்னிலைப்படுத்திய 23.8.2020 ம் தேதியிட்ட முச்சலிக்கா என்ற ஆவணத்தில் உள்ளதாக சொல்லப்படும் மனுதாரர்/

வாதி கையெழுத்துடன் ஒப்பிட்டு கையெழுத்து நிபுணரிடம் ஆய்வு அறிக்கை பெற வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

v) அதற்காக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமிக்க கோரியுள்ளார்.

vi) மனுதாரர் / வாதி இம்மனுவில் சொன்ன 22.07.2020ம் தேதியிட்ட ஆவண எண்.1706/2020 என்ற அடமான ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க இடைநிலை மனு எண்.4/2023–யை தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டது. ஆனால் சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் ஆவணம் மட்டும் இருப்பதாக தெரிய வந்ததால் மீண்டும் மேற்படி நெய்க்காரப்பட்டி பாரத ஸ்டேட் வங்கி கிளையில் இருந்த அசல் அடமான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கோரி இடைநிலை மனு எண்.5/2023 தாக்கல் செய்து, அது அனுமதிக்கப்பட்டு, அதன்பேரில் கடந்த 14.08.2024ம் தேதியன்று மேற்படி அடமான ஆவணம் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

Vii) அதனை தொடர்ந்து கூடுதல் தொடர் உத்தரவுக்காக இம்மனுவின் விசாரணை இன்று ஒத்தி வைக்கப்பட்டது.

Viii) இருதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையாகி, மேற்படி கடந்த 23.8.2020ம் தேதியிட்ட முச்சலிக்கா மற்றும் கடந்த 22.07.2020ம் தேதியிட்ட ஆவண எண்.1706/2020 என்ற அடமான ஆவணம் ஆகிய இரண்டு ஆவணங்களையும் கையெழுத்து நிபுணரின் ஆய்வுக்கு உட்படுத்தலாம் என்றும், அதற்காக வழக்கறிஞர் திரு.K.தினேஷ்குமார்

(Enrollment No.5812/2023) என்பவரை நீதிமன்ற ஆணையராக நியமிக்கலாம் என்றும் கேட்டுக்கொண்டனர்.

ix) இறுதியாக, மேற்படி 23.8.2020ம் தேதியிட்ட முச்சலிக்காவில் உள்ளதாக சொல்லப்படும் மனுதாரர்/ வாதியின் கையொப்பம், மனுதாரர்/ வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட 22.07.2020ம் தேதியிட்ட அடமான ஆவணத்தில் உள்ள கையொப்பத்துடன் ஒத்து போகிறதா? இரண்டும் ஒரே நபரால் ஏற்படுத்தப்பட்டதா? என அறிவியல் ரீதியாக அறியும் பொருட்டு தடய அறிவியல் துறை கையெழுத்து நிபுணரின் ஆய்வுக்காக மேற்படி இரண்டு அசல் ஆவணங்களையும் அனுப்பி வைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

x) மேற்படி ஆவணங்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு எடுத்துசெல்லவும், ஆய்வுக்கு பிந்தைய அறிக்கையை பெற்று இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும், வழக்கறிஞர் திரு.கே.தினேஷ்குமார், (Enrollment No.5812/2023) அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். அவருக்கு ரூ.5000/-த்தினை மனுதாரர் / வாதி தரப்பு கட்டணமாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

xi) மேலும் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ஏதும் இருப்பின் அதனையும் மனுதாரர்/ வாதி வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

xii) மேற்படி தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கப்படும் மேற்சொன்ன ஆவணங்களை கையெழுத்து நிபுணர் முறைப்படி ஆய்வுக்கு உட்படுத்தி மேற்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கும்

விதமாக ஆய்வறிக்கை ஒன்றினை காரணத்தாளுடன் முடிந்த வரை விரைவாக இந்நீதிமன்றத்திற்கு மேற்சொன்ன வழக்கறிஞர் வாயிலாக உரிய முறையில் அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

R.KARTHIKEYAN Digitally signed by R.KARTHIKEYAN
Date: 2024.08.19
18:46:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

**ஆய்வுக்கு அனுப்ப வேண்டிய ஆவணங்கள் பட்டியல் :–**

1) 23.8.2020 ம் தேதியிட்ட முச்சலிக்கா – அசல்

2) 22.07.2020 ம் தேதியிட்ட அடமான ஆவணம் – அசல்

R.KARTHIKEYAN Digitally signed by R.KARTHIKEYAN
Date: 2024.08.19
18:47:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

நகல்:–

1) K.தினேஷ்குமார்,
நீதிமன்ற ஆணையர்/ வழக்கறிஞர்
பழனி.
2) உதவி இயக்குனர்,
தடய அறிவியல் துறை (ஆவணங்கள்)
மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலை,
மருத்துவக்கல்லூரி வளாகம்,
மதுரை –20.

19.08.2024